**06.08.2024 அ.வ.எண்.370/1998 வா.சா.2, பெருமாள் த/பெ. ரங்கசாமி**

**குறுக்கு விசாரணை**

வாதிக்கு வழக்கு சொத்து எப்படி சொந்தம் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி வீட்டிற்கு மேற்கு பக்கம் மாரி மற்றும் அங்கு ஆகியோர் வசித்து வந்தனர் என்பது சரிதான். அவர்கள் இருவரும் சகோதரர்கள் என்பது சரிதான். மேற்படி சகோதரர்கள் இருவரும் ஒரே கூரை வீட்டில் இரண்டு வாசல்படி வைத்து தனித்தனியாக இருந்தனர் என்றால் ஒரு வாசல்படி இருந்தது மட்டும் எனக்கு தெரியும் மற்றொரு வாசல்படியை நான் பார்த்ததில்லை. மாரி அந்த இடத்தில் வசித்ததை நான் பார்த்ததில்லை. பிரதிவாதி மேற்படி மாரி மற்றும் அங்குவின் வீட்டை வாங்கிவிட்டார் என்பது சரிதான். எப்போது வாங்கினார் என்பது தெரியாது. வழக்கு சொத்தின் வடபுறம் பூந்தோட்டம் உள்ளது, தெற்கில் தெருவீதி உள்ளது, கிழக்கில் கோவிந்தராஜ் ஆசிரியர் காலிமனை உள்ளது, மேற்கில் பிரதிவாதி வீடு உள்ளது. மாரி மற்றும் அங்கு வசித்த வீட்டோடு சேர்ந்தார் போல இருந்த மற்றொரு வீட்டில் வேலியப்ப கவுண்டர் வசித்தார். வேலியப்ப கவுண்டர் வசித்த வீட்டையும் பிரதிவாதி வாங்கிவிட்டார் என்பது சரிதான். அவ்வாறு எப்போது வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி வீடு கட்டி சுமார் 28 வருடம் இருக்கும். அவ்வாறு வீடு கட்டும் போது 1-ம் வாதிக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சனை என்று கேள்விப்பட்டேன். அந்த பிரச்சனை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. வழக்கு சொத்தின் புல எண் தெரியாது. இந்த வழக்கில் சாட்சி சொல்ல அழைப்பாணை வரவில்லை. ஏற்கனவே, பிரதிவாதியின் வீட்டுக்கு பக்கத்தில் வசித்து தற்போது வழக்கு சொத்திலிருந்து 500 அடி தொலைவில் வசிக்கிறேன். வழக்கு சொத்தை எப்போது அளந்தனர் என கேட்டால் சுமார் ஒன்றரை வருடம் இருக்கும். வழக்கு சொத்து கிழமேல் 12 கஜம் தென்வடல் 36 கஜம் ஆகும். பிரதிவாதி அவர் கிரயம் வாங்கிய இடத்தில்தான் வீடு கட்டியுள்ளார் என்றும் அவர் வாதியின் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. வாதியிடம் பிரதிபலன் எதிர்பார்த்து அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பது சரியல்ல.